தென்காசி திருவள்ளுவர் கழக 97ஆவது திருக்குறள் விழா தொடக்கம்

தென்காசி, மே 24: தென்காசி திருவள்ளுவர் கழக 97-ஆவது திருக்குறள் விழா வெள்ளிக்கிழமை தொடங்கியது. இந்த விழா வருகிற 27ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

விழாவின் முதல் நாளான வெள்ளிக்கிழமை காலை 5.45 மணிக்கு திருக்குறள் முற்றோதல் வேள்வி நடைபெற்றது. காலை 8 மணிக்கு தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதர் கோயில் செயல் அலுவலர் இரா.முருகன் திருக்குறள் கொடியேற்றினார். துணைத் தலைவர் எம்எம் எஸ்.இலக்குமணன் முன்னிலை வகித்தார். தொடர்ந்து முத்துசாமி குழுவினரின் மங்கல இசை நடைபெற்றது. காலை 8.30 மணிக்கு தமிழ்மறை நகர்வலத்தை தியாகி கி.இலக்குமிகாந்தன் பாரதி தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில், குப்பன் திருவள்ளுவர் போன்று வேடமணிந்து வந்தார். காலை 9.30 மணிக்கு இரா.நரேந்திரகுமாரின் திருக்குறள் பண்ணிசை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விழா மங்கலம் நிகழ்ச்சிக்கு, திருவள்ளுவர் கழக செயலர் இராம.தீத்தாரப்பன் தலைமை வகித்தார். வடகரை மா.சங்கிலிரத்தினம் முன்னிலை வகித்தார். பொறியாளர் சோம.முத்துசுவாமி வாழ்த்திப் பேசினார். 'இனம் காட்டும் இசைபெறு குறளில் இவர்களைச் சந்திப்போம்' என்ற தலைப்பில் சி.க.சாமி, இல.வீரபுத்திரன், இரா.கிருஷ்ணன், ர.வ.கணேசன், ப.சோ.வேலாயுதம், ஆ.சதாசிவம், ஆவுடையம்மாள், தெ.க.கிருஷ்ணமூர்த்தி, தி.செல்லப்பா, சோம.இளங்கோவன் ஆகியோர் பல்வேறு பொருள்களில் பேசினர்.

பேராசிரியர் தெ.ஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற திருக்குறட் பேரவையில் பங்கேற்றோர்.

திருவள்ளுவர் கழக தலைவர் வழக்குரைஞர் ந.கனகசபாபதி வரவேற்றார். பொருளாளர் வ.சந்திரசேகரன் நன்றி கூறினார்.

மாலையில் நடைபெற்ற திருக்குறட் பேரவை நிகழ்ச்சிக்கு, முனைவர் தெ.ஞானசுந்தரம் தலைமை வகித்தார். மதிப்புறு தலைவர் துரை.தம்புராஜ் முன்னிலை வகித்தார். தியாகி கி.இலக்குமிகாந்தன் பாரதி வாழ்த்திப் பேசினார். 'இம்மை மறுமைக்கு அருமருந்தான திருக்குறளில்' என்ற தலைப்பில் அறம் என்ற பொருளில் பேராசிரியர் எம்.ராமச்சந்திரன், பொருள் என்ற பொருளில் புலவர் கா.ச.பழனியப்பன், இன்பம் என்ற பொருளில் பேராசிரியர் அரங்க.ராமலிங்கம் ஆகியோர் பேசினர்.

ஆய்க்குடி அமர்சேவா சங்கத் தலைவர் எஸ்.ராமகிருஷ்ணன், தென்காசி நகர்மன்றத் தலைவர் ஆர்.சாதிர், மருத்துவர் தங்கபாண்டியன், துணைத் தலைவர் க.சோ.கல்யாணிசிவகாமிநாதன் மற்றும் சென்னை, திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து திரளானோர் கலந்துகொண்டனர்.

தலைவர் ந.கனகசபாபதி வரவேற்றார். பொருளாளர் வ.சந்திரசேகரன் நன்றி கூறினார்.

முல்லைப் பெரியாற்றில் புதிய அணை: எடப்பாடி பழனிசாமி, வைகோ கண்டனம்

சென்னை, மே 24: முல்லை பெரியாற்றில் புதிய அணை கட்ட கேரள அரசு முயற்சிப்பதற்கு அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி, மதிமுக பொதுச் செயலர் வைகோ ஆகியோர் கண்டனம் தெரிவித்தனர்.

எடப்பாடி பழனிசாமி: உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக முல்லைப் பெரியாறு அணையில் புதிய அணை கட்டும் பொருட்டு மத்திய அரசுக்கு கேரள அரசு கடிதம் எழுதியிருப்பது கண்டிக்கத்தக்கது. முல்லைப் பெரியாறு பிரச்னையில் திமுக அரசின் செயலற்ற தன்மையால் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகளும், குடிநீருக்காக நம்பி உள்ள பல மாவட்ட மக்களும் வேதனையில் உள்ளனர். இனியாவது, திமுக அரசு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி சட்ட நடவடிக்கை எடுத்து, கேரள அரசின் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

வைகோ: உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்காமல், கேரள அரசு புதிய அணை கட்டுவதற்கு ஆய்வுகள் மேற்கொள்வதும் , திட்ட அறிக்கையைத் தயாரித்து உள்ளதும் கண்டிக்கத்தக்கது. அதற்கு ஆதரவாக தமிழகத்தை வஞ்சிக்கும் வகையில் கேரள அரசு செயல்படுவதும் கண்டனத்துக்குரியது. கேரள அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்து, கேரளத்தின் திட்டத்தை தமிழக அரசு முறியடிக்க வேண்டும்.

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு: விசாரணையை 3 மாதங்களுக்குள் முடிக்க உத்தரவு

மதுரை, மே 24: சாத்தான்குளத்தைச் சேர்ந்த தந்தை, மகன் கொலை வழக்கு விசாரணையை 3 மாதங்களுக்குள் முடிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

கரோனா காலத்தில் விதிகளை மீறிச் செயல்பட்டதாக சாத்தான்குளத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோரை போலீஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்று தாக்கினர்.

இதில் பலத்த காயமடைந்த இருவரும், கோவில்பட்டி கிளைச் சிறையில் இருந்து, அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ் உள்ளிட்ட 9 காவலர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிந்து, குற்றப் பத்திரிகையையும் கடந்த 2020, செப்டம்பரில் தாக்கல் செய்தது.

இதுதொடர்பான வழக்கு விசாரணை மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், ஜெயராஜின் மனைவி செல்வராணி, இந்த வழக்கை விரைந்து விசாரித்து எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்க விசாரணை நீதிமன்றத்துக்கு உத்தரவிடக் கோரி, உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீமதி முன் அண்மையில் விசாரணைக்கு வந்தது. அப்போது சிபிஐ தரப்பில், இந்த வழக்கில் இன்னும் ஒரு சாட்சியை மட்டுமே விசாரிக்க வேண்டியுள்ளது. ஆகவே, விசாரணை விரைவில் முடிந்துவிடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் குறுக்கிட்டு, ஏற்கெனவே வழக்கு விசாரணையை விரைந்து முடிக்கக் கோரி மனு தாக்கல் செய்திருந்தோம். ஆனால், தொடர்ந்து கால அவகாசம் பெற்று, விசாரணையை இழுத்தடித்து வருகின்றனர். எனவே, வழக்கு விசாரணையை விரைந்து முடிக்க உத்தரவிட வேண்டும் என்றார்.

இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, தந்தை, மகன் கொலை வழக்கு விசாரணையை 3 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.

நியாய விலைக் கடைகள் நாளை இயங்கும்

சென்னை, மே 24: தமிழ்நாடு முழுவதும் ஞாயிற்றுக்கிழமை (மே 26) நியாய விலைக் கடைகள் இயங்கும் என்று உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையர் ஹர்ச ஹாய் மீனா உத்தரவிட்டார்.

இதுதொடர்பாக அவர் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் வெள்ளிக்கிழமை அனுப்பிய சுற்றறிக்கை:

மே மாதத்துக்கான சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருள்களை உரிய காலத்துக்குள் வழங்க வேண்டியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் ஞாயிற்றுக்கிழமை (மே 26) வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது. இதற்கு ஈடான விடுமுறை நாள், பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சேலத்தில் மதிப்பிழந்த ஒரு கோடி ரூபாய் நோட்டுகள் பறிமுதல்

சேலம், மே 24: சேலத்தில் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதிப்பிழந்த ஒரு கோடி ரூபாய் நோட்டுகளை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

சேலம், வீராணம் பகுதியில் கடந்த 2 நாள்களுக்கு முன்பு அம்மாபேட்டை போலீஸார் நடத்திய சோதனையில் கஞ்சா வைத்திருந்த 8 பேரை கைது செய்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சபீர் என்பவர் கஞ்சா விற்பனை செய்தது தெரிய வந்தது.

இதையடுத்து சேலம், அம்மாபேட்டை, ராமலிங்கம் தெருவைச் சேர்ந்த ரௌடி சபீர் வீட்டில் காவல் ஆய்வாளர் பால்ராஜ் தலைமையிலான போலீஸார் சோதனை செய்தனர். அப்போது, வீட்டில் பதுக்கி வைத்திருந்த ரூ. 99 லட்சம் மதிப்பிலான மதிப்பிழந்த பழைய 500, 1,000 ரூபாய் நோட்டுகளை பறிமுதல் செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் மதிப்பிழந்த இந்த நோட்டுகளை மாற்றித் தருமாறு தொழிலதிபர் ஒருவர் தன்னிடம் தந்ததாகவும், அதை மாற்றுவதற்கான காலக் கெடு முடிவடைந்ததால் தன்னிடமே இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

சபீரை கைது செய்த போலீஸார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சேலம் மத்திய சிறையில் அடைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க போலீஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

வட்டாரக் கல்வி அலுவலர் பதவி உயர்வு: இறுதிப் பட்டியல் வெளியீடு

சென்னை, மே 24: வட்டாரக் கல்வி அலுவலர் பதவி உயர்வுக்குத் தகுதியான 329 அரசு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் பட்டியலை தொடக்கக் கல்வித் துறை வெளியிட்டது.

இதுகுறித்து தொடக்கக் கல்வித் துறை சார்பில் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வித் துறை) அனுப்பப்பட்ட சுற்றறிக்கை:

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் வட்டாரக்கல்வி அலுவலர் பணியில் 50 சதவீத இடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. அதன்படி, நிகழாண்டு வட்டாரக்கல்வி அலுவலர் காலிப் பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பும் வகையில், தகுதி பெற்ற அரசு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அவ்வாறு பெறப்பட்ட விவரங்கள் தொகுக்கப்பட்டு 2011 டிச.31-ஆம் தேதிக்கு முன்னர் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியில் சேர்ந்து வட்டாரக் கல்வி அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த 330 நபர்களின் தற்காலிக பெயர் பட்டியல் தயார் செய்யப்பட்டது. இந்தப் பட்டியலில் திருத்தம், சேர்க்கை, நீக்கம் ஏதும் இருப்பின் உடனடியாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட திருத்தம், சேர்க்கை மற்றும் நீக்கம் தொடர்பான அறிக்கையில் சில நபர்களின் 'எமிஸ்' குறியீட்டு எண் மற்றும் பெயரில் பிழை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதையடுத்து ஒழுங்கு நடவடிக்கை, பணி ஓய்வு காரணமாக இருவரது பெயர்கள் நீக்கப்பட்டன. அதேவேளையில் விடுபட்ட தலைமை ஆசிரியரின் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தகுதி வாய்ந்த 329 நபர்களின் இறுதி பெயர் பட்டியல் இத்துடன் இணைத்து வெளியிடப்படுகிறது.

என்கோர் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிட்டெட் (என்கோர் ARC)
EARC-BANK-029-ட்ரஸ்ட் ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது
பெருநிறுவன அலுவலக முகவரி : 5 வது தளம், பார்ட் எண். 137, செக்டர் 44, குருகிராம் - 122 002, ஹரியானா

விரைவு தபால் / தூதஞ்சல்

EARC/2023-24/B5/01 தேதி : 29.04.2024

1). பாலமுருகன் S, 147, அருப்பம்பட்டி மந்தை குடும்பன்பட்டி, நல்லமன்றகோட்டை, திண்டுக்கல், தமிழ்நாடு - 624 005
2). ஆனந்தவள்ளி B, 147, அருப்பம்பட்டி மந்தை குடும்பன்பட்டி, நல்லமன்றகோட்டை, திண்டுக்கல், தமிழ்நாடு - 624 005
3). கனகா S, 147, அருப்பம்பட்டி மந்தை குடும்பன்பட்டி, நல்லமன்றகோட்டை, திண்டுக்கல், தமிழ்நாடு - 624 005
(இதன் மேற்கண்ட 1, 2, 3 நபர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக "அறிவிப்பு பெற்ற நபர்" என்றும், கூட்டாக "அறிவிப்பு பெற்ற நபர்கள்" என்றும் அழைக்கப்படுவர்)

பொருள் - பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் பிரிவு 13(2) ன் கீழான அறிவிப்பு (இனிமேற்கொண்டு "சட்டம்" என்றே அழைக்கப்படும்)

அய்யா / அம்மையீர்,
தங்களின் வேண்டுதலின் பேரில், அறிவிப்பு பெற்ற நபர் எண். 1 க்கு மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட் அல்லது ("வங்கி") அதன் மதுரை கிளை மூலம், வங்கியின் பெயரில் பிணைக்காப்பு ஏற்படுத்தப்பட்ட பல்வேறு சொத்துக்களுக்கு எதிராக, அவ்வப்போது நிதியுதவியாக ("நிதிச்சொத்துக்கள்") பல்வேறு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன கடன் வசதிக்கு தேவையான விபரங்கள் மற்றும் அறிவிப்பு பெற்ற நபர்களான தங்களால் ஏற்படுத்தப்பட்ட ஜாமீன் ஒப்பந்த(ங்கள்) / ஆவண(ங்கள்) ஆகியன முறையே **பட்டியல் "A" மற்றும் "B"** ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த(ங்கள்) / ஆவண(ங்களின்) படி, தாங்கள் மேற்சொன்ன நிதியுதவிகளை திருப்பி செலுத்த உத்திரவாதமளித்து மேற்சொன்ன நிதியுதவிகளை பெற்றுள்ளீர்கள்.
அறிவிப்பு பெற்ற நபர் எண். 1 ஆகிய தாங்கள் ஜாமீன்தாரர்கள் & அடமானதாரர்களுடன் சேர்ந்து அறிவிப்பு பெற்ற நபர் எண். 1 ன் நடப்பு சொத்துக்கள் (புத்தக கடன்கள் உட்பட.) மற்றும் இதன் கீழ்க்கண்ட **"பட்டியல் C"** ல் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கான சொத்துரிமை ஆவணங்களை ஒப்படைவு செய்து அடமானம் செய்து பிணைக்காப்பு ஏற்படுத்தியுள்ளீர்கள்.
தாங்கள் மேற்சொன்ன கடன் வசதி தொடர்பாக நிலுவையிலுள்ள கடன் பொறுப்பை பல்வேறு கடன் மற்றும் ஜாமீன் ஆவணங்களை அவ்வப்போது ஏற்படுத்தி ஒப்புக்கொண்டுள்ளீர்கள். மேற்சொன்ன நிதியுதவி / கடன் வசதிகள் ஒழுங்கற்று மாறியதோடு, தங்களால் அசல் கடன் மற்றும் வட்டி ஆகியவை தங்களால் திருப்பி செலுத்தப்படாமல் தவறிழைக்கப்பட்டதால், இந்திய ரிசர்வ் வங்கியின் இயக்குதல்கள் / வழிகாட்டுதல்களுக்கிணங்க, மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட் - ஆல் 11.04.2023 அன்று அக்கடன் "செயல்படாத சொத்துக்கள்" என வகுக்கப்பட்டுள்ளன.
மேற்சொன்ன நிதியுதவி தனிநபர் ஜாமீன்கள் (கூட்டாக "ஜாமீன்தாரர்கள்" என்றே அழைக்கப்படும்) மூலமும் ஜாமீனளிக்கப்பட்டுள்ளது.
தொடர் வேண்டுகோள்கள் விடுத்த போதும், தாங்கள் மேற்சொன்ன நிதியுவைகள் / கடன் நிலுவைகளை திருப்பி செலுத்த தவறியதோடு, உதாசீனப்படுத்தியுள்ளீர்கள்.
என்கோர் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிட்டெட் ("EARC") ஆனது இதன் மேற்குறிப்பிட்ட நிதிச்சொத்துக்கள் மற்றும் இதன் கீழ்க்கண்ட ஜாமீன் சொத்துக்களை அவற்றின் அனைத்து உரிமைகள், சொத்துரிமைகள் மற்றும் பலன்கள் ஆகியவற்றுடன் வங்கியிடமிருந்து 29.09.2023 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் வாயிலாக கையகப்படுத்தியுள்ளது, மேலும் மேற்சொன்ன சட்டம் பிரிவு 5 ன் கீழ் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட் - ஆல் இதன் கீழ்க்கண்ட ஜாமீன் சொத்துக்களும் பரிமாற்றப்பட்டுள்ளன.
மேலும், சட்டம் பிரிவு 13(2) ன் படி, இந்த அறிவிப்பை வழங்குவதன் மூலம் EARC தங்களை இதன் மூலம் அழைத்து, இதன் கீழ்குறிப்பிட்ட தங்களது கடன் பொறுப்பை முழுமையாக EARC க்கு இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த கோருகிறது.
EARC க்கு நகெயுத்த வேண்டிய நிலுவையாக உள்ள 20.04.2024 ம் தேதியின் படியிலான தங்களது கடன் நிலுவைத்தொகை ரூ. 10,82,991/- (ரூபாய். பத்து இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்று மட்டும்) ஆகும். தாங்கள் மேற்சொன்ன தொகைக்கு 21.04.2024 முதல் ஒப்பந்த விதத்தில் மேற்கொண்டு வரும் வருங்கால வட்டி, நிகழ் செலவுகள், செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றையும் செலுத்த கடமைப்பட்டுள்ளீர்கள்.
தாங்கள், சட்டம் பிரிவு 13(2) ன் படியிலான அறிவிப்பில் உள்ளவாறு, மேற்சொன்ன நிலுவைத்தொகை ரூ. 10,82,991/- (ரூபாய். பத்து இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்று மட்டும்) மற்றும் மேற்சொன்ன தொகைக்கு மேற்கொண்டு வரும் வட்டி, நிகழ் செலவுகள், செலவுகள் ஆகியவற்றை, இந்த அறிவிப்பிலிருந்து 60 நாட்களுக்குள் EARC க்கு செலுத்த தவறும் பட்சத்தில், பிரிவு 13 உட்பிரிவு (4) மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் இதர பொருந்தத்தக்க ஏற்பாடுகளின் கீழ் விவரிக்கப்பட்ட அனைத்து அல்லது ஏதேனும் உரிமைகளையும் EARC செயலுறுத்தும்.
மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு 13 ன் படி, இவ்வறிவிப்பில் கண்ட **"பட்டியல் C"** ல் உள்ள ஜாமீன் சொத்துக்களை, EARC ன் எழுத்து பூர்வ முன் அனுமதியின்றி விற்கனையாகவோ, வாடகைக்கோ அல்லது வேறு எவ்விதத்திலுமே பரிமாற்றம் செய்வதிலிருந்து இதன் மூலம் சட்ட ரீதியாக தடை செய்யப்படுகிறீர்கள் என்பதையும் தங்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அறிவிப்பை பெறுபவர்களாகிய தங்களுக்கு உள்ள கால அவகாசம் தொடர்பாக சர்ஃபாசி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு 8 ன் படி தங்களின் கவனம் வரவேற்கப்படுகிறது. அதனால் தாங்கள் இவ்வறிவிப்பில் கோரப்பட்டவாறு கட்டுப்பட்டு, முற்றிலும் அபாய நேர்வு, செலவு மற்றும் பின்விளைவுகளைப்பொறுத்து தங்களது பொறுப்பினை சர்ஃபாசி சட்டத்தின் கீழான மேல் நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள் என்பதை தயவு கூர்ந்து அறியவும்.
இவ்வறிவிப்பு 06.06.2018 தேதியிட்டு சர்ஃபாசி சட்டம் 2002 ன் பிரிவு 13(2) ன் கீழ் வழங்கப்பட்ட முந்தைய அறிவிப்புக்கு அடுத்த கட்டமாக பட்டியலில் குறிப்பிட்டுள்ள அசையா சொத்து/க்களுக்காகவும், அது தொடர்பான பின்தொடர்ச்சி நடவடிக்கைக்காகவும் என இதன் மேல் முகவரியிடப்பட்ட அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது.
இந்த அறிவிப்பு, கடன்தாரர்/களிடமிருந்து வரவேண்டிய நிலுவைகள் தொடர்பாக என்கோர் ARC க்கென உள்ள அனைத்து இதர உரிமைகள் மற்றும் தீர்வுகள் மீதான தப்பெண்ணத்தியன்றி மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(2) ன் கீழ் தங்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை தயவு கூர்ந்து அறியவும்.

தங்கள் உண்மையுள்ள,
ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்,
என்கோர் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிட்.
EARC-BANK-029-ட்ரஸ்ட் ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது

பட்டியல் "A"
20.04.2024 ம் தேதியின் படியிலான நிலுவை அறிக்கை
வீடு கட்டுதல்
20.04.2024 ம் தேதியின் படியிலான நிலுவைகள்

கடன் கணக்கு எண்	இலவலிக்கப்பட்ட தொகை (இந்திய ரூபாயில்)	அசல் நிலுவைத்தொகை (இந்திய ரூபாயில்)	வட்டி @ 16.03% (இந்திய ரூபாயில்)	அபாத வட்டி @ 2% (இந்திய ரூபாயில்)	இதர கட்டணங்கள் (இந்திய ரூபாயில்)	மொத்த நிலுவைத்தொகை (இந்திய ரூபாயில்)
SMADU0002388	8,70,410	7,46,037	1,08,034	63,692	1,65,228	10,82,991

* 20.04.2024 ம் தேதியின் படி மொத்த நிலுவைத்தொகை ரூ. 10,82,991/- (ரூபாய். பத்து இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்று மட்டும்) மற்றும் 21.04.2024 முதல் பணம் செலுத்தப்படும் வரை ஆவணத்தில் உள்ள விதத்தில் மேற்கொண்டு வரும் நிகழ் செலவுகள், செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியன.

பட்டியல் "B"
ஜாமீன் ஒப்பந்த(ங்கள்) / ஆவண(ங்களின்) விபரங்கள்

வ எண்	ஆவணங்களின் விபரங்கள	தேதி
1	சொத்துரிமை ஆவண ஒப்படைவுக்கான புரிந்துணர்வு ஆவணம்	07-11-2016
2	முருகன் & வடிவேல் பெயரில் உள்ள பட்டா	08.08.1985
3	முருகன் பெயரில் உள்ள ஆதங்கள்	04.01.2012
4	முருகனின் சரியான இறப்பு சான்று	31 .01 2005
5	முருகனின் சரியான வாரிசு சான்று	11.05.2005
6	கனகா பெயரில் செல்வராஜ் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட தான ஆவண எண். 115/1209.01.2012	09.01.2012
7	கட்டிட அனுமதி அங்கீகாரம்	13.09.2014
8	01.01.1987 முதல் 31.05.2003 வரையிலான வில்லங்க சான்று எண். 4303/14	12-08-2014
9	01.06.2003 முதல் 07.12.2014 வரையிலான வில்லங்க சான்று எண். 4303/14	09-02-2016
10	01.01.2014 முதல் 12.10.2016 வரையிலான வில்லங்க சான்று எண். 3342/2016	13-10-2016
11	தான ஆவணம்	09-01-2012

பட்டியல் "C"
ஜாமீன் சொத்துக்களின் விபரங்களாவன
அசையா சொத்துக்களின் விபரம்
திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், வேடசந்தூர் சார் பதிவு அலுவலகம், வேடசந்தூர் தாலுக்கா, நல்லமன்னார் கோட்டை கிராமம், சர்வே எண். 362/4 ல் உள்ள 32 செண்ட், மேற்கு புறம் உள்ள 1386 சதுர அடி., இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு - செல்வராஜ் சொத்து, மேற்கு - சாலை, தெற்கு - செல்வராஜ் சொத்து, கிழக்கு - செல்வராஜ் சொத்து.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அம்பேடோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref.: RO/SAR/SN/22/2024-25 தேதி: 23.05.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ம் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) திரு. S.இமாம் அலுமது ஹுஸைன். [M/s.சிராஜ் மில்க் ஏஜென்ஸி உரிமையாளர்], எண்.2/1, M.K.காம்பௌண்ட், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.
மேலும் இருப்பிடம்: கதவு எண்.65, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.

2) திருமதி. I.கௌஸியா, எண்.65, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.
மேலும் இருப்பிடம்: எண்.2/1, M.K.காம்பௌண்ட், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெடின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை கவனிக்கும் செய்யப்படாமலுக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 22.05.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.63,27,787.19-ஐ (ரூபாய் அறுபத்து மூன்று லட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்றி எண்பத்தேழு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்) பிணைவட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "எள்ளை உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 14.06.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்: திருமதி. I. கௌஸியா

சொத்து விபரம்: திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பிள்ளையார்நத்தம் கிராமம், S.No. 82/1, Re.S.No.82/1B3-ன்கீழ் அமைந்துள்ள 62 செண்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், வண்டிப்பாதை மற்றும் நடைபாதை உரிமைகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பிற உபகரணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து திருமதி. I. கௌஸியா என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவகத்தில் 22.08.2019 தேதியில் பதிவுபெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திர எண்.4175/2019-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: S.No. 82/1-னுள்ள 259 செண்ட் இடத்தில் 58.5 செண்ட் அளவுள்ள சொத்து, கிழக்கே: S.No. 82/A-னுள்ள சொத்து, தெற்கே: S.No. 83 & 83/3-னுள்ள சொத்து, மேற்கே: வடக்கு-தெற்காக வண்டிப்பாதை. .

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ரூ.40,18,000/- (ரூபாய் நாற்பத்து லட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	ரூ.4,01,800/- (ரூபாய் நான்கு லட்சத்து ஆயிரத்து எண்ணூறு மட்டும்)
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	14.06.2024 அன்று 02:00 PM முதல் 03:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை)
வங்கிக்க